புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஆண்டாளும் காதலும்

முனைவர் ம.ஷீலா,
உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை ,
இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி , செங்கல்பட்டு,

ஆய்வுச் சுருக்கம்
*மனிதன் உலகியலில் வாழ்ந்தாலும், ஆன்மீக வாழ்வுடனேயே அவன் வாழ்வு முழுமையடைவதாக நம்புகின்றான்.இறைவனுடனாய அவன் உறவுநிலைகள், பலவிதமாகப் பேசப்பட்டாலும் பிரிவற்ற நிலையில் அவனோடு ஒன்றும் நிலையும் அவற்றுள் ஒன்றாகும். இதனை நாயக-நாயகி பாவம் என்பர்.இறைவன் நாயகனாகக் கருதப்படுவதால், அவனை அடையத் துடிக்கும் நாயகியாய் அடியார்கள் தம்மை உணர்ந்து பாடும் நிலை பக்தி இலக்கியங்களில் உள்ளன. ஆண் தன்னை நாயகியாக உணர்ந்து பாடிய பாக்களின் மத்தியில் பெண்ணாகிய ஆண்டாள் இறைவனுடன் ஒன்றத் துடிக்கும் நாயகியாகத் தன்னை உணர்ந்து பாடிய பாக்களில் பெண்மையின் உணர்வுத் துடிப்பைக் காண்கிறோம். இறைவன் மீது பெண் காதல் கொள்ளளலாம் என்னும் புது மரபை உருவாக்கியவர் ஆண்டாள்.பெண் காதல் கொண்டால், மரபு நிலையில் நின்றே தன்னுணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்னும் மரபில் பிறந்தாலும் மாறாகத் தான் விரும்பும் பெருமாளுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் போக்கினையும் ,உள்ளத்துடன் உடலையும் ஒப்படைக்கும் பாங்கினையும் ஆண்டாளிடம் காண்கின்றோம்.ஒருவகையில் சமுதாயத்தினின்றும் தன்னைத் தற்காக்கும் முயற்சியாகவும் அமையும் இவ்வெளிப்பாடு மரபுமீறலின் குரலாய், அசையாத நம்பிக்கையாய், சான்றாய் அமைகின்றதாம். பெருமாளுக்குத் தன்னைத் தகைமையளாக. உணர்ந்தவளாதலின் பல வழிகளிலும் அவனை அடைய முயல்கின்றாள் ;எந்தவொரு சிறு வழியையும் விடாதவளாய், பிறர்க்கு வழிகாட்டியாய், வழியும் கூறுபவளாய், , ஆண்டாள் அமைகின்றாள்.'நினைத்தது நடக்கும் வரை விடாது போராடுவதால் 'முயன்றால் முடியும்'என்பதே ஆண்டாள் காதலுணர்த்தும் செய்தியாகும்.*

*அடையாளச் சொற்கள்:*
*ஆண்டாள், நாயக-நாயகி பாவம், பள்ளமடை பாய்தல், காமன், வாமனன், வராகன் , மடலேறல், ஆய்ச்சிய பாவம், நாணிலி, இரட்டை நாக்கன்.*

*முன்னுரை:*
*உயிர்களின் வாழ்வே இலக்கை நோக்கிய வாழ்வாதலின், தத்தம் மனவுணர்களுக்கேற்ப கோலம் பெறுகின்றன.உலகில் பிறந்த மனிதன் தன் கண்முன் காண்பது, உலகியலாயினும் இந்து மரபில் இறைவனும் முக்கியமானவராய்த், தவிர்க்கவியலாதவராய் இடம்பெறக் காணலாம்.தானறிந்த வகையில் இறைவனை உணரத் தொடங்கும் மனிதன் அப்பாதையில் முன்னோர் வழியறியின், அதனையே பின்பற்றுபவனாய், அதிலும் தனக்கோர் வழியைத் தேடுபவனாய்என விளங்கி, தன் இலக்கை அடைய முற்படுகின்றான்.பக்தி இலக்கிய பாடல்களும் இதனையே நமக்கு உணர்த்துகின்றன.ஆண்டாள் நாச்சியாரின் வாழ்க்கை இலக்கை , இறையுடனாய காதலை, மரபிற்கு எதிரான குரலை அவர் எங்ஙனம் வெளிப்படுத்துகின்றார் என்பது பற்றி இக் கட்டுரையில் காண்போம்.பெண் உரிமை அடைந்து கொண்டிருப்பதாகக் கருதப்படும் இந்த காலத்தும், இவரின்பாக்கள், சொல், செயல் வழிகள் போல்வ வழிகாட்டுவதாக இருக்கும்*

*என்பதாலும், பெண் கடந்து வந்த பாதைகள் பற்றிய அறிவை உணர்த்தும் என்பதாலும் இவ்வாய்வு இங்கு செய்யப்படுகின்றது.*

*1.ஆண்டாள் திருமொழிகள்:*

*இறைவன்(திருமால்) கல்யாண குணங்களில் ஆழ்ந்த ஆண்டாள் இறைவனையே தன் காதலால், பக்தியால் ஆண்டு கொண்டவர். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாய், குழந்தை பருவத்திலேயே கண்ணன் கதைகளையும் பெரியாழ்வார் பாக்களையும் கேட்டு வளர்ந்தமையால் திருமாலாம் கண்ணன் மேல் கொண்ட அன்பு கோதையிடம் காதலாக மலர்கின்றது."மானிடவர்க் கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்" 1 என்னும் உறுதியாய், நிலைபெற்றதுடன் நில்லாமல் தன் தகைமை பற்றி அறியும், எண்ணும், உறுதிபடுத்தும் பண்பினளாய், அவருக்குத் தான் பொருத்தமானவள் என்பதைத் தனக்கே உறுதிப்படுத்துபவள் போல தினமும் திருமாலுக்குச் சூடத் தரும் பூமாலையைத் தானணிந்து கண்ணாடி முன் நின்று பார்த்து தன்னன்பைத், தான் அவருக்குத் தகுதியானவளே, தனக்கு அவர் கிடைப்பார், கிடைத்தே ஆக வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறாள்.வெறுமனே மனவுணர்வுகளை மட்டும் சாராது, உளவியல் பாங்கிலும் நிலைபெற்றவளாய், தன்னிடமிருந்து பிரிக்க முடியாத உணர்வு உடையவளாகின்றாள். அவனருள் உடன் கிடைக்காமையின், கொண்டகாதல் மீதூரத் தன்னுணர்வுகளைக், காதலன்பின் செல்லும் வெளிப்பாடுகளாய் நாச்சியார் திருமொழிகளாய் வெளிப்படுத்துகின்றாள்.*

*மனிதர்பால் கொள்ளும் அன்பு காதல்.இறைபால் கொள்ளும் அன்பு பக்தி என்னும் மரபை மாற்றி, இறைவன்பாலும் பெண் கொள்ளும் அன்பு காதலாகலாம்; தன்னுணர்வை முனைப்புடன் உணர்த்தலாம்; 'அழுத பிள்ளைதான் பால்குடிக்கும்'எனவெளிப்படுத்தும் நிலையைப் பெண்ணீர்மை குறைந்தது '(நாச்.தி.12:3 ) எனக் கூறுவதாயினும் , கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் நிலையை ; என்னிலை இதுவேஎனக்கு இதுதான் தேவையென உறுதிபட உரைக்கும் பாங்கைக் காண்கிறோம். அதனைப் பற்றி நாமிங்கு காணலாம்.*

*2.ஆண்டாளும் காதலும்:*

*இறைவனாம் திருமாலையே மணாளாக வேண்டும் பக்தி காதல் ஆண்டாளின் காதல்.இதனை 'நாயக-நாயகி பாவம்' என்றல் மரபு."எல்லா இருமைகளையும் கடந்த ஒருமை சார்ந்த யோக அனுபூதி நிலையேஇப்படி காதல் வெளிப்பாடாக நாயகி பாவத்தில் பரிணமிக்கிறது. படைத்தவன் வேறு படைப்பு வேறு என்ற பேத எண்ணமும் அதில் முளைக்கும் கசடுகளும் இந்த பாவத்தில் இல்லை.எல்லா சிருஷ்டி பேதங்களிலும் தன்னையே உணர்ந்து அந்த சுயம் மீது காதல் கொண்டு அந்தக் காதலையே இந்தப் பிரபஞ்சம் முழுவதற்குமான பேரன்பாகப் பிரதிபலிக்கும் களிப்பு நிலை அது"2. "அடியவர்களின் வாழ்க்கையிலுள்ள 'பாவனை' தெய்வீக சாதனையின் தோற்றங்கள்" என்று ப. அருணாசலமும் 3 ; இதனாலேயே சமய இலக்கியங்கள் தனி சுவையுடையதென கண்ணதாசனும் 4. இவ்வுணர்வு நிலை பற்றிக் கூறுவர்.*

*இறைவனைத் தலைவனாகத் தன்னைத் தலைவியாகக் காண்பது பொதுவாய பக்திக் காதலாக அமையினும், ஆண்டாளோ பெண்ணாதலின் பாவனை இல்லாது ஊனுருக, உயிர் உருகத் தன் அன்பை, பக்தியை, காதலை மொழிகின்றாள். இதனைப் 'பள்ளமடைப் பாய்தல் போல்'என்பது வழக்காம். தந்தையாய், குருவாய் விளங்கிய பெரியாழ்வார்பால் கண்ணனாம் திருமாலை அறிந்தவள், உணர்ந்தவள் அவராலேயே அவனை அடையும் வழியை அறிகின்றாள்.ஆயின் அறிந்தும், செயல்பட்டும், நாச்சியார் திருமொழியில் அணை திறந்து விடுவது போல கொட்டுகின்றாள்.*

*தன் இறை காதல் நிறைவேற காமனை வேண்டும் ஆண்டாள் தன் நிலையைக் காதலின் உறுதியை வெளிப்படுத்துபவள் போல், இன்று நேற்று ஏற்பட்ட காதலன்று இது ; 'அவரைப்பிராயம் 'தொடங்கி ஏற்பட்ட காதல் ; தன் பெண்மையின் நிலைபேறும் அவனை அடைதலே என்றவள் அதனை உவமம் வழியும் உறுதிபடுத்துகின்றாள் (1:5) ; காதல் உணர்வில் ஆய்ச்சியாய்த் தன்னை உணர்ந்தவள் -ஆய்ச்சியர் நோன்பும் நோற்றவளன்றோ? எம் துகிலைத் தா; உன்னழகால், செயலால் எங்களை மயக்கும் நீ எம் சிற்றிலைச் சிதையாதே என்றும் உறவாடியவள், அவனை அடையும் உணர்வு மீக்கூர ஆய்ச்சியர் கூடலும் இழைத்தமை நினைவுக்கு வருகின்றது. அவனன்பை அனுபவிக்கும் விரகம் மீதூர , 'கண்ணன்எனை நாடிவர, அவன் வரவை அறிவிக்க.*

,'குயிலே கூவுவாயாக'என்கிறாள்.கண்ணனாம் திருமாலை மணம் செய்ததாகக் கண்ட கனவினை விவரிக்கின்றாள்.நாரணன் கையிலுள்ள பாஞ்சசன்னிய சங்கிடமும் அவன் வாய்ச்சுவையை வினவி அதன் பேற்றில் ஏக்கமும் கொண்டவளாய், 'அது எனக்குமுரியதே'என உரிமையும் நிலைநாட்டுகின்றாள். விரகம் மீதூர மேகத்தைத் தூது ஆக்கியவளுக்குக் கார்கால வரவின் செழிப்பில் யாவும் கண்ணனாகவே தோன்ற மகிழ்வும் துயரும் மிகுகின்றது ;108 திவ்வியதேச நாயகர்களில் தன் மணாளனாய்த் திருவரங்கனைத் தேர்ந்தவள், அவர்பால் தன் காதலை மொழிகின்றாள்.

'பெண்ணீர்மை குறையினும் 'பரவாயில்லை ; என்னால் ஆற்றி இருக்க முடியவில்லை ; அவன் வாழிடம் என்னைக் கொண்டு சேருங்கள் ;அது முடியாவிட்டால் அவன் பொருட்களையாவது கொண்டு வந்து என்னைத் தேற்றுங்கள் என்றவள், ஆயனைக் கண்டாயோ? கண்டேன் எனும் பாவனையில் இருவராய் உணர்ந்து தேடி, கண்ட மகிழ்வாய், 'நாச்சியார் திருமொழி'அமைகின்றது.இப்பாக்களில் ஆண்டாளின் காதலுணர்வு ,அவன் தன்னை ஏற்பான்ஏற்றேயாக வேண்டுமெனும் உரிமையும் , நம்பிக்கையும் துலங்கக் காண்கிறோம்.

2.1.1 உறுப்புக்காதல்:

காதலுற்றவர் பொதுவாக தம் மனவுணர்வுகளைப், பிரிவின் துயரைக் கூறுதல் வழக்கம். ஆயின் ஆண்டாளோ தன் மனத்தை மட்டுமன்று தன் உடலையும் பெருமாளுக்கு அர்ப்பணித்தவளாய், தன் உறுப்புக்கள் மீதும் காதலுணர்வை ஏற்றிக் கூறக் காணலாம்.

"பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப புணர்வதோ ராசையி னாலென்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ஆவியை ஆகுலஞ் செய்யும் "
(நாச்.தி.5:7:1-2).

"உலங்குண்ட விளங்கனி போலஉள்மெலியய் புகுந்து
நலங் கொண்ட நாரணற்கு என்நடலை நோய் செப்புமினே"
(நாச்.தி.8:6:3-4).

"அவரைப் பிராயம் தொடங்கி என்றுமாதரித் தெழுந்தவென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுது வைத்தேனொல்லை
விதிக்கிற்றியே" (நாச்.தி.1:4:3-4).

"தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன் திருக்கைகளா லென்னைத்
தீண்டும் வண்ணம்
சாயுடை வயிறுமென் தடமுலையும் தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றே"
(நாச்.தி.1:7:3-4).

என்றெல்லாம் உணர்ந்தவள், மொழிந்தவள் "மானிடவர்க் கென்று பேச்சுப் பபடில் வாழகிலேன் " (1:5:4) ,"கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் இப்பேறு" (1:8:4)வேண்டும் என அன்பினால் சரணடைகின்றாள்.ஆண்டாளின் காதல் உயிர்க்காதல் மட்டுமன்று உடலும் உயிரும் கலந்த காதலுமாம். பெண்ணாதலின் ஒரு கவசமாகவும் இதனைப் பபயன்படுத்தக் காணலாம்.

2.1.2 நோக்குவ யாவும் அவனேயாதல்:

காமனை வேண்டியும், ஆய்ச்சியர் பாவமேற்றும் குயில், மேகம் முதலானவற்றைத் தூதாகவிட்டும், நனவேபோல் கல்யாண நிகழ்வுகளைக் கண்டும் திருமாலுடன் தொடர்புடைய பாஞ்சசன்னியத்திடம் பெருமாள் வாய்ச்சுவை கேட்டும் தன்னிலை மொழிந்தவளுக்கு எங்கும், எல்லாமும் அவனாகவே தோற்றுகின்றது (இந்திரகோபம், முல்லை, கோவை....).

"கருவிளை ஒண்மலர்காள் காயாமலர்காள் திருமால் உருவொளி காட்டுகின்றீர்"(9:3:1-2).திருமால் போன்ற கரிய நிறமுடையதால் சோலையின் குயில், மயில், கருவிளை, பூவை மலர்கள் , களங்கனிகள் என யாவும் பஞ்சமாபாதகர்களாய்த் துயர் செய்கின்றன. சோலையின் சுனைகளும், தாமரைப்பூவும் வண்டுகளும் பெருமாள் உருவையே நினைவூட்டுகின்றன.

2.1.3 ஒன்றே இலக்கு :

கண்ணனாம் திருமாலின் அன்பை அடைதலேஉயர்வு ; பிறவியின் பயன் ; வாழ்வின் ஒரே நோக்கு.அவன் ஏற்காவிடின், என் பிறப்பும் வீணே; பயனின்று என்பாள் போல்,

"கோங்கலரு பொழில்மாலிருஞ் சோலையில் கொன்றைகள்மேல்

*தங்குபொன் மலைகளோ டுடனாய் நின்று தூங்குகின்றேன்"*
*( நாச்.தி.9:9:1-2).*

*என்றறைகின்றாள். இப்பிறப்பின்றி மறுபிறப்பில் தவஞ் செய்து அவனருள் பெறலாம் என்பதும் வேண்டாம் என்றவள், 'ஒன்றே செய்க நன்றே செய்க அதுவும் இன்றே, இப்பொழுதே செய்க'என்னும் வழக்கிற்கேற்ப அவனருளும், அன்பும் இப்பொழுதே வேண்டுமென உறுதிபட நிற்கின்றாள்.அவர் வாக்குப் பொய்யானால்என் பிறப்பும் பொய்யே (10:4) ;பொய்யாயின் இது தவறன்றுஎன் பிறவியின் துயரே என்பாள்போல் நான் பிறந்தபின்பே தன் அரவணைபோல் அவனுக்கும் இரண்டு நாக்காயிற்று ; அவனே நாணிலி என வருந்துகின்றாள்(10:3); ஆயினும் கொண்ட கொள்கை மாறாநிலையள் ;'சூடிக்கொடுத்த சுடர் கொடியாதலின் இரண்டில் ஒன்று என் முகம் பார்த்து கூறட்டுமென 'கொக்கென'நிற்கின்றாள்.*

*"செம்மையுடை திருமார்வில் சேரத்தானேனும் ஒருஞான்று*
*மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி விடைதான் தருமேல்நன்று"*
*(நாச்.தி.13:9:3-4).*

*2.1.4 நம்பிக்கை நாயகி:*

*தன்னன்பில் 'இறைவனுக்குத் தான் ஏற்றவளே'என்னும் நிலையில் உறுதியுடன் நிற்கும் ஆண்டாள், அசைவற்ற நம்பிக்கையளாய்த் திகழ்ந்து வழிகாட்டுகின்றாள். அதுவே விரகமூட்டும் கடலை ,நானும் நீயும் ஒப்பென கடலைத் தூதனுப்பச் செய்கின்றது 10:9). என் விருப்பம் மட்டுமன்று அவன் விருப்பமும் அதுவே ;மாயவன் வந்து உரு காட்டுகின்றான் 12:3) என்றெல்லாம் பேசச் செய்கின்றது.அவன் மேல் விருப்பம் கொண்டதன் காரணமாய் எனக்கும் அவனுக்கும்சங்கை(வளை கழலல்)இழக்கும் வழக்கு உண்டு; உருகாட்டாது உள்ளம் புகுந்து துயர் செய்வான் ;6உயிரும் அளித்து கூத்தாட்டும் காண்பான் (5:2) ; எங்களுக்கிடையே உறவும் உள்ளது. இரகசியம் பிறரறியார் ;வைகுந்தனே என் தோணியுமாவான் என்று குயிலைக் கூவக் கூறுவாள்.அவன் பெரியன் , நான் சிறு மானிடமாயினும், எனக்காகவாரானாயினும் பெரியாழ்வார் அழைக்க, வருகையில் நான் அவனைக் காண்பேன் ; மகிழ்வேன்;*

*"வில்லிப்புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை*
*வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே"(நாச்.தி.10:10).*

*எனும் நம்பிக்கையள்.'தம்மை உகப்பாரைத்தாமுகப்பர்' (11:10:3)எனக் கண்ணன் கூறியதாய் பெரியாழ்வார் கூறுவதால், அதனையும் அவர்வழி அறிந்தவளாதலின், அவன் இருப்பிடம் சேர்ப்பின் நான் பிழைப்பேன் ;அவனும் என்னை ஏற்பான் என நம்பிக்கை நாயகியாகின்றாள்.*

*இரண்டில் ஒன்று தெளியலாம் என ஆண்டாள் கூறினாலும்(13:9) ,அது மற்றவர்க்கேயன்றி அவளுக்கு அல்லவாம் ; ஏனெனில் அவள்தான்,*

*"உள்ளே உருகிநைவேனை உளளோ இளோ என்னாத*
*கொள்ளைக் கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்*
*கொள்ளும் பயனொன் றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கொடும்*
*அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில் எறிந்து என்னழலைத் தீர்ப்பேனே"*
*(நாச்.தி.13:8).*

*என்னும் உறுதியில் உள்ளாளே.இதன்முன் திருமாலின் வீம்பும் பாராமுகமும் என் செய்யும்....? அவளின் நற்சிந்தனைகளே, நம்பிக்கை உணர்வே, அதற்கேற்ற செயல்பாடுகளே அவளை ஊக்குகின்றன*

*2.1.5 செயல்படத் தூண்டல்:*

*தன் உணர்வுக்குச், சிந்தனைக்கு எதிரான எதிர்நிலைகளையும் தனக்குதவுவதாக (சாதகமாக)மாற்றும்அழகினை ஆண்டாளிடம் காணலாம்.'இடும்பைக்கே இடும்பை செய்பவர் போல்கடலைத் தூதாக்குகின்றாள் ; ஆண்டாளின் துயருக்கு ஆறுதல் கூற வந்தவர்கள் அவள்படும் துன்பம் பொறாது செயலற்று நிற்க அவளோ 'தம்மை உகப்பாரைத்தாம் உகப்பர்'(11:10:3), என அவர்களுக்கே ஆறுதல் அளிக்கின்றாள் ; வாமனனாய் பிச்சையேற்ற நிலை நிறைவுறாமையாலே அவள் வளையலைக் கவர்கின்றாரன்(11:4); உலகம் முதல் யாவும் செங்கோலாய் ஆள்பவருக்கு என் வளையலால் துயர் போகுமானால் சரியே (11:3) ;நல்லவர் ; அரங்கத்துள்ள பெருமான் ஒன்றுமில்லாத என் வளைக்கு (கைப்பொருருளுக்கு) ஆசைப்பட்டார் (11:5) ; பெண்மீது ஆசை*

*கொண்டு துயருற்றவர்(சீதை பிரிவு -11:7);அவளைக் காக்க இழிவும் கருதார்(வராக அவதாரத்தில் சேறு, பாசி கருதாது பூமி தேவியைக் காத்தல்(10:8); பிறருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை மணந்தவர்(உருக்குமணி-11:9)இத்தகு நல்ல அழகர் எனக்கருள்வதில் மட்டும் தாமதமேன்? என்பாளாய் அவன் வாக்கை நினைவூட்டுவாள் போல் பட்டர்பிரான் கூற்றையும் நினைவூட்டக் காணலாம் (11:7:10).*

*2.1.6 வழியும் தானேயாகின்றாள்:*

*எண்ணும்எண்ணத்தின் உறுதி செயலைத் தூண்டி இலக்கையடையச் செய்யும் என்றாற் போல், திருமால்மீது கொண்ட அன்பு பலருக்கும் அவன் அருளிய பாங்கை, அவன் செயவ்களால் (கல்யாண குணங்களில்-ஆய்ச்சியர் உறவு ;உருக்குமணி மணம், தசவதாரநிலை)ஆழ்ந்தவள், அறிந்தவள் அவற்றை அனுபவிப்பாளாய் காதலுணர்வும் மீதூர , இன்பில் துன்பு ;துன்பில் இன்பு காண்பவளாய்அலமரும் அவள், துயர் செய்யும் கடல் மேகங்களை துயர் நீக்கும் கருவியாய்த் தூது ஆக்குகின்றாள்.அவன் வரவு கூறி குயிலைக் கூவக் கூறியும் , யாவும் அவனாய்க் கண்டும் (இயற்கை ,பறவை.....) ஆழ்ந்தவள், தன் துயர் தீர தானே வழியும் கூறுகின்றாள். அவனிடம் தன்னைக்கொண்டு சேர்க்க மதுரை நகர்ப்புறம், ஆயர்ப்பாடி பொய்கை, யமுனைக் கரைகள், பத்தவிலோசனம், பாண்டீரம் ,கோவர்த்தனம், துவராபதி என்றெல்லாம் அடுக்கியவள் ,இறுதியாக துயர் செய்த மகனை ஈன்ற நந்தகோன் வீட்டு வாயிலிலே சேருங்கள் என்கிறாள் (12:1-9) . அவன் பொருட்களை -அரையின்பட்டாடை அவனணிந்த துளசி மாலை, குழலில் பதிந்த அவன் வாய்நீர் ,பாதத்தூளிகளை எல்லாம் கொண்டு என்னைத் தடவுங்கள் ; அவன் தோளோடு என் முலையினை இறுக்கிக் கட்டுங்கள்: முலையை அவன் மீது பிடுங்கி எறிவேன் அதன் துயர் போமென வழியும் மொழிகின்றாள் 8(13:1-9). இத்துடன் திருப்தி அடையாதவளாய் தானே இரு பாவனையாய் அவனைக் கண்டாயா? கண்டேன் என உணர்வில் ஆறுதலுமாகின்றாள். திருமால் மீது அன்பில் நிறைந்து எண்ணங்களே அவனாய், வாழ்வாய்த் தொட்டனைத்தூறும் மணற்கேணியாய், வெள்ளத்தனைய மலர் நீட்டமாய் , எண்ணியதைத் திண்ணமாய், நம்பி, சொல்லி அடைகின்றாள்.முயற்சியும் திருவினை ஆக்கியது.6*

3. *ஆண்டாளின்காதல்:*

*மானிடமாய்ப் பிறந்தும் இறையே மணாளன் என்னும் நம்பிக்கையில் ஊறிய ஆண்டாள் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் 7என பல விதங்களிலும் முயல்பவளாய்ப் ,பிறர்க்கும் நம்பிக்கையூட்டி தன் விருப்பை நிறைவேற்றுகின்றாள். வழக்கமாகப் பெண் தன் காதலை வெளிப்பட பேசக்கூடாது ; ஆனால் காமமிக்க கழிபடர் கிளவி உண்டு; ஆயின் தன் காதலுக்காக நாணத்தை விடக்கூடாது (மடலேறல் போல்வ) ; என்றெல்லாம் மரபு விதிகள் இருக்க, ஆண்டாளோ யாவற்றிற்கும் முரணாய்த் தன் குரலை எழுப்புகின்றாள்.எண்ணம் சரியாயின் அதனை நடப்பில் கொண்டு வர செய்யும் சொல், செயல்கள் யாவும் சரியே என்பாள் போல செயல்படுகின்றாள்.'உயிரினும் சிறந்தது நாண் ;நாணைவிட சிறந்தது செயிர்தீர்க் கற்பு; எனவே அறத்தொடு நிற்கலாம் என 'மரபு கூற, ஆண்டாளோ எனக்கு வேண்டின் நானேதான் முயல வேண்டும் ;வழிகளைக் காண வேண்டும்.எதிர்நிலைகளாயினும் அவற்றுள்ளும் நன்மையை மட்ட.டும் எடுக்க வேண்டும் ;வழியை உருவாக்க வேண்டுமென நம்பிக்கையளாய் முன்னேறி 'இலக்கை அடைய வேண்டுமென'முயன்று வெல்கிறாள்.*

*பெண் தன் உறுப்புகளை வெளிப்படையாகக் கூறல் மரபன்று.ஆனால் ஆண்டாளோ அதையே இறைவனை அடைவதற்கானை(மணாளனாய்) ஒரு பாதுகாப்பு கவசமெனக் கையாளக் காணலாம்.தன் விருப்பு நிறைவேறுவதற்கான வழிகளைத் தேடுபவளாய்(காமனை வேண்டல், தூது); தனக்கே நம்பிக்கை ஊட்டல் ; அடியார் உறவும் வாழ்வும் வழிகாட்டியே (ஆய்ச்சிய பாவம்) ;தன் எண்ணம் நிறைவேற இயற்கை, பறவை, மனிதர், திருமால்என யாவரிடமும் சாம பேத தான தண்ட நிலைகளாய், மனமொழி செயல்களைக் கையாளல் ; விடாமுயற்சி பலனைத் தரும் என்றாற்போல் நம்பிக்கை நாயகியாய் அவனை நினைத்து, சொல்லி, செயல்பட்டு நின்றான், இருந்தான், கிடந்தான் என்பது போல திருமாலை மணாளனாய் அடைய கருமமே கண்ணாக வாழ்ந்து வாழ்கின்றாள்.*

*வழக்கமாக அடியார்கள் தம் பக்திமை நிலையை உணர்த்துபவர்களாய்த் தம்மை இழித்துரைப்பது வழக்ககம்.இறையுணரா சுந்தரர் முதலில் பழிப்பினும், பின் உணர்ந்து இரங்கினார். ஆனால் ஆண்டாளோஅன்பின் தலைநிற்பாளாய் தன்னைச் சரணடைந்த பெண்ணை வதைத்தான் (8:9);*

*சுந்தரத் தோளுடையான் சுழலை (9:1); இரட்டை நாக்கன்(10:3) ;பொய்யன்(10:4);பிச்சை ஏற்றும் நிறையாதவர்(11:4); திருடன் (11:5); சுயநலம்(11:7);மானமிலிப் பன்றி(வராகர்11:8); பெண்ணாளன் (11:9); பெற்ற தாயை விட்டு வேறொருவர் வீட்டில் வளர்ந்தவன்(12:1);பெண்ணின் வருத்தம் அறியா பெருமான்(13:1);கொடிய கடிய திருமால் (13:6); குறும்பன்(13:8) ; ஏலாப் பொய்கள் உரைப்பவன்(14:3); தருமமறியாத குறும்பன்(14:6);உள்ளும் புறமும் கரியான்(14:8) என்றெல்லாம் பழிக்கின்றாள் .அவன் இப்படி என்றால் அவன் பெற்றோரும் குறை கூறற்கு உரியவர்களே என்பாள்போல் 'இவ்வாறு துயர் செய்யும் மகனைப் பெற்றவன் நந்தகோபன்(12:3);தாயான யசோதையைப் பற்றிக் கூறுகையில், 'பிள்ளையை உலகிற்குப் பயனற்ற வேப்பங்காயாக வளர்க்கிறாள்'(13:7);'கண்டிப்பின்றி ஆணாட விட்டுள்ளாள்'எனப் பழிக்கின்றாள்(3:10)தன் பெண்ணீர்மை அழியினும் அவனை அடையும் நோக்கமுடையவள் ஆதலின் அவன் தொடர்புடையாரைப் பழித்தால் தன் எண்ணம் நிறைவேறுமா என்ற பயம் சிறிதும் இன்றித் தன் அன்பை வெளிப்படுத்தும் கூறாய் இதனைக் காணலாம்.*

*முடிவுரை:*

*முயற்சியே மனிதம் ; அதுவே தன் விருப்பை நிறைவேற்றுவதற்கான வழி ;முன்மரபு வழி காட்டலாம். ஆனால் அதுவே வழியாகாது. நம் வழியை நாம்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். மமரபு போற்றத்தக்கதே; ஆனால் அது விலங்காய் நம் இலக்கை அடையத் தடை செய்யின் உடைத்து முன்னேறுவதில் தவறின்று என்பதை உணர்த்துவதாய், எல்லாவற்றிலும் நன்மையை, நேர்சிந்தனைகளை மட்டும் கண்டு 'மெய் வருத்தம் பாரார் போல்'விடா முயற்சியில் முன்னேறின் இலக்கை -அது இறை காதலாயினும் சாத்தியமாக்கலாம் என்பதே ஆண்டாள் காதல் ,வாழ்க்கை, பாக்கள் உணர்த்தும் உண்மையாகும்.*

*அடிக்குறிப்புகள்*

*1.ஆண்டாள், நாச்சியார் திருமொழி, அண்ணங்காச்சாரியார் உரை, 1977, 1:5:4.*
*2.ஜடாயு, அண்டம் அளாவிய காதல், 8.112006, jataayu.blogspot.com*
*3.ப. அருணாசலம், பக்தி இலக்கியம், 2914 ,ப.106.*
*4.கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம் -2, ஆண்டாள் தமிழை ஆண்டாள்.*
*5.திருவள்ளுவர், திருக்குறள், பரிமேலழகர் உரை, 1921; திருக்.623.*
*6.மேற்படி, திருக்.396 ,595 , 666 , 616.*
*7.மேற்படி ,திருக்.620.*
*8. தொல்காப்பியர் தொல்காப்பியம் , இளம்பூரணர் உரை , 2019 ,, பொருளதிகாரம் -111.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********